[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1984 பிப்ரவரி 22

கப்பட்ட மனுக்களில் நியாயமான, தகுதியுடையவர்கள் விட்டு இருந்தால், அதை வெரிபை பண்ணி, அவர்களை தகுதியுடையவர்களாக்கி, அவர்களுக்கும் கிடைப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்களை கலந்து பேசி ஆவன செய்வேன் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், நிவாரண வேலைகள் வேகமாக நடைபெற்றன என்பதற்காக உதாரணமாகச் சொல்ல வேண்டும் என்றால், தஞ்சாவூர் கலெக்டர் அலுவலகத்தை எடுத்துக்கொண்டால், அங்கே ஒரு டெபுடி கலெக்டர் போடப்பட்டிருக்கிறது. திருச்சியிலேயும், ஒரு ஆர்.டி.ஓ., டெபுட்டி கலெக்டர் எல்லாம் போடப்பட்டிருக்கிறது. இன்னும் பல்வேறுபட்ட அதிகாரிகள் போடப்பட்டிருக்கிறார்கள் இன்றைக்கு தஞ்சையிலே மட்டும், அங்கே தங்கி வேலை செய்ய வேண்டும் என்று, பொதுப்பணித்துறைக்கும், நெடுஞ்சாலைத்துறைக்கும், 2 தலைமை இன்ஜினியர்களையும், அவர்களுக்குத் துணையாக பல இன்ஜினியர்களையும் இந்த அரசு போட்டிருக்கிறது என்பதை நான் சொல்லி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 23–2–1984 காலை 9–00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 8–10 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது

10. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

(86) வருவாய்த்துறையின் 28–3–1959 ஆம் நாளிட்ட S.R.O. ஏ. 1966/1959 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் ஒன்று செய்வது குறித்து வணிக வரிகள் சமய அறக் கட்டளைகள் துறையின் 20—12—1983 ஆம் நாளிட்ட 1452 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

(87) உள்துறையின் 31—3—1979 ஆம் நாளிட்ட II(2)/HO/2308/79 ஆம் எண். அரசாணையின்படி இந்திய அரசுக்குச் சொந்தமான அனைத்து மோட்டார் வண்டிகளுக்கும் அனுமதிக்கப்பட்ட விலக்கினை ரத்து செய்வதுகுறித்து உள்(போக்குவரத்து) துறையின் 27—12—1983 ஆம் நாளிட்ட 2725 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

1984 பிப்ரவரி 22]

(88) தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்தின் 1981–82 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்) (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது)).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

(17) உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் (முதல் பட்டியல்).

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

TAMIL NADU LEGISLATURE LIBRARY
2 APR 1985
MADRAS-600 009